Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (17-9-65) இதழ் 217

விசுவாவசு புரட்டாதி 1 ஐ: அவ் பிறை 20 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொ
னெ
ன்
ஷீ
ன்



சொ
னெ
ன்
ஷீ
ன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பாடப்புத்தகங்கள் தனியார் வெளியிடமுடியாது

பம்பலப்பிட்டி, வியா.

பாடப்புத்தகங்களை தனியார் வெளியிடுவதற்கு அனுமதி வழங்க முடியாது என கல்வி மந்திரி திரு. ஐ. எம், ஆர். ஏ. இரியகொல்லை அறிவித்துள்ளார். இது விஷயத்தில் முந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கொள்கையைப் பின்பற்ற கல்வி மந்திரி முடிவு செய்துள்ளார்.

பாடப்புத்தகங்களின் விநியோகத்தை தனியார் செய்வதற்கு அனுமதிக்கப்படுமென அறிவிக்கபட்டுள்ளது.

# "பாக். நிபந்தனை ஒன்று கூட ஏற்கமாட்டோம்

# சண்டையை தீவிரமாக்குவதை தவிர வேறு வழியில்லை"

## லோக சபையில் இந்திய பிரதமர் அறிவிப்பு: கேந்திர பாக். கிராமம் பிடிபட்டது

புதுடில்லி, செப் .16

யுதாண்டின் சண்டை நிறுத்த யோசனையை நிபந்தனை எதுவுமின்றி இந்தியா ஏற்றதென்றும், ஆனல் சில முக்கிய பிரச்னைகள் பற்றித் தலைமைக்காரியதரிசிக்கு விளக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்தியப் பிரதமர் சாஸ்திரி பார்லிமெண்டில் அறிவித்தார். எனினும் காஷ்மீரிலிருந்து துருப்புகளை விலக்கிக்கொள்வது, ஐ. நா. ஆசிய, ஆபிரிக்கப்படை ஒன்றைக் காஷ்மீரில் நிறுவுவது, 3 மாதத்தில் அங்கு தேர்தல் நடத்துவது என்ற பாகிஸ்தானின் 3 நிபந்தனைகளில் ஒன்றைக்கூட இந்தியா ஏற்கமுடியாதென்றும், இந்நிலையில் தற்போதைய சண்டையைத் தீவிரமாக்குவதைத்தவிர வேறு வழியில்லை என்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

"இச்சண்டையினல் இரு நாட்டுமக்களுக்கும் சொல்ல முடியாத துன்பங்களும் கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இந்திய மக்கள் அவற்றைப் புன்முறுவலுடன் ஏற்பார்களென நம்புகின்றேன்" என சாஸ்திரி அறிவித்தபோது சபை பலத்த கரகோஷத்துடன் அதை அங்கீகரித்தது.

ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் இணைப்பான ஒரு பகுதியென்பதைத் தாம் யுதாண்டிடம் கூறியதாயும் ஊடுருவல்காரர்கள் அங்கு இருந்து விலக்கிக்கொள்ளப் பட்டாலொழிய சண்டை நிறுத்தம் இல்லையெனத் தாம் அவரிடம் தெரிவித்திருப்பதாயும் சாஸ்திரி கூறினர்.

வற்புறுத்தல், அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு இந்தியா பணியாது என்றும் இந்தியப்பிரதமர் கூறினர்.

தமக்கும் யுதாண்டுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துக்களை திரு. சாஸ்திரி சபையில் சமர்ப்பித்தார். ஊடுருவல்காரர்கள் காஷ்மீருக்குள் பிரவேசித்தபோது ஐ. நா. அதைக் கண்டித்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது என தாம் யுதாண்டிடம் தெரிவித்ததாயும் அவர் கூறினர்.

இதற்கிடையில் லாகூர் அரங்கில் பூர்க்கி என்ற முக்கிய பாகிஸ்தானிய கிராமம் ஒன்றை இந்தியத்துருப்புக்கள் பிடித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. முதல் தடவையில் பாகிஸ்தானின் இந்த அரங்கில் டாங்கி எதிர்ப்பு ஏவுகருவிகளைப் பிரயோகித்தனர் என்றும், ஒன்றரை மணி நேரத்தில் 2500 பீரங்கி குண்டுகளை அவர்கள் பிரயோகித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தியத் துருப்புக்கள் இப்பகுதியிலுள்ள பாகிஸ்தான் பிரதேசத்தில் 8 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றன. மேலும் முன்னேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு பாகிஸ்தானியர் முக்கிய பாலம் ஒன்றைத்தகர்த்துவிட்டனர். 45 பாகிஸ்தானியரின் சடலங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டன.

சியல் கோட்டில் இந்தியத் துருப்புக்கள் மேலும் வெற்றி பெற்று தொடர்ந்து முன்னேறிவருகின்றன.

ஊரி பகுதியில் பாகிஸ்தானியரின் 3 எதிர்த் தாக்குதல் பலத்த ஆள்சேதத்துடன் முறியடிக்கப்பட்டதென்றும் 60 பாகிஸ்தானி

(6-ம் பக்கம் பார்க்க)

## சேர். கந்தையா மறைவுக்கு யாழ். மாநகரசபை அனுதாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"1961 ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழியை நிர்வாக மொழியாக்கத் திட்டமிட்ட போது, தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்காக முன்னின்று போராடியவர்களில் காலஞ் சென்ற சைவப் பெருந்தகை சர் கந்தையா வைத்தியநாதனும் ஒருவராவர் அவர் சேவையைத் தமிழினம் என்றும் மறக்க முடியாது."

நேற்று முன்தினம் மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் திரு. பீற்றர் சோமசுந்தரம் சேர் வைத்தியநாதனின் மரணம் குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்றின்மீது பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். காலஞ் சென்ற சர் கந்தையா வைத்தியநாதனின் மறைவு குறித்து சபையில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

"சைவ உலகுக்கும் குறிப்பாக திருக்கேதீஸ்வரத் திருப்பணிக்கும் தம்மையே அர்ப்பணித்து அரும் பெரும் தொண்டாற்றிய சைவப் பெருமகன் சர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் அகால மரணம் குறித்து வருந்தும் இச்சபை தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னரைப் பிரிந்து தவிக்கும் அன்னரின் துணைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் தெரிவித்துக் கொள்கிறது."

திரு. ஆ. துரைராஜசிங்கத்தினல் சபையில்கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்ட தீர்மானம் வருமாறு:-

"எமது சனப்பிரதிநிதிகள்சபை, மேற்சபை ஆகியவற்றில் தமிழ்ப் பேச்சுக்கள் அதிகம் இடம் பெருமையால், எமது பாராளுமன்ற நடவடிக்கைப் பதிவுப் புத்தகங்கள், மேடைத் தமிழ், அவைத் தமிழ்பற்றி அறிய அவாவும் தமிழ் இளைஞர்களுக்குப் போதியளவு பயன்பட முடியாதிருக்கிறது. எனவே மேற்படி ஆராய்ச்சியில் ஈடுபடத் துடிக்கும் தமிழ் பேசும் இளைஞரின் அறிவுப் பசிக்கு உதவும் பொருட்டு, யாழ்ப்பாண பொதுஜன நூல் நிலையத்திற்குச் சென்னை சட்டசபை நிகழ்ச்சிப் பதிவுப் புத்தகங்களை வாங்கி அளிக்கவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது."

## "பண்டிதர்கள் அரசாங்க ஆசிரியர்களாக்கப்பட வேண்டும்"

### கல்விமந்திரிக்கு பண்டிதகழகம் மகஜர்

யாழ்ப்பாணம். வெள்ளி


பண்டிதர்கள், புலவர்கள் வித்துவான்கள் ஆகியோர் அரசினரால் ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்றும், பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரி, ஈழத்துப் பண்டித கழகம் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளது.

கல்வி மந்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கடந்த பத்து ஆண்டுகளாக பண்டிதர், வித்துவான், புலவர்களில் ஒருவராவது அரசினரால் ஆசிரியராக நியமிக்கப்படவில்லையென்பதை தங்கள் கவனத்துக்குச் சுட்டிகாட்டவிரும்புகிறேம். பண்டிதர், புலவர், வித்துவான் பட்டம்பெற்று வேலையற்றிருப்போர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பண்டிதர் பட்டம் பல்கலைக் கழகப் பட்டத்தைப் போல நான்கு வருடப்படிப்பின் பின்பே வழங்கப்படுகின்றது. தமிழ் மொழி, தமிழ்இலக்கியம், திறனய்வு, இந்து சமயம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்ற இவர்களே பண்டிதர், புலவர், வித்துவான் பட்டம் பெற்றவர்களாவர். உயர்தர வகுப்புக்களுக்கு கல்வி பயிற்றக் கூடிய திறமையுள்ள இவர்களை தேசிய அரசாங்கம் உரிய அந்தஸ்தில் வைக்கவேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேம்.

பண்டிதர்கள் என்ற பிரிவில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்கள், பிராசீன பண்டிதர்கள், இந்தியப் பல்கலைக் கழக வித்துவான்கள், புலவர்கள் அடங்குவர். சம்பள முரண்பாட்டுச் சபை, சம்பள பதவி நிர்ணய சபை முதலிய விசாரணைச் சபைகளும் மேலே குறிப்பிட்டோரை ஒரே அந்தஸ்தில் வைத்துக் கணித்தமையை இங்கு தங்கள் கவனத்துக்குக்காட்டுகிறேம்.



## இன்று வன்னியசிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து, தமிழ் மொழிக்காகவும், தமிழ்பேசும் மக்களுக்காகவும் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்தவரான, காலஞ்சென்ற திரு. கு. வன்னியசிங்கத்தின் ஆருவது ஆண்டு நினைவு விழா இன்று அனுஷ்டிக்கப் படுகிறது.

இவர் தமிழரசுக்கட்சிஆரம்பித்த நாள் முதல் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு, பல இன்னல்கள் பட்டார். இறுதி வரை இலட்சியத்திற்காகப்

(6-ம் பக்கம் பார்க்க)

## 5 வருடக் கடூழியச் சிறை

### சிறுமியிடம் தகாதமுறையில் நடந்தவருக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

பதினெரு வயது சிறுமியிடம் தகாத முறையில் நடந்ததாக, நான்கு பிள்ளைகளுக்கு தந்தையான 45 வயதுடைய எதிரிக்கு ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ தம்பையா கியூ. சி. முன்னிலையில் கடந்த இரு தினங்களாக வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி மன்னர் பகுதியைச் சேர்ந்த விடத்தல் தீவு என்னும் கிராமத்தில் முகமது அப்துல்லா என்பவர் (வயது 45) நாகூர்தம்பியின் மகள்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

“என்றும் யோக முயற்சியோடு அன்புடன் என்னை வழுத்துபவர்களுக்கு நான் புத்தி யோகத்தை வழங்குகின்றேன். அதன்மூலம் அவர்கள் என்னை அடைகின்றனர்.”

— பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதி ௴ 1 உ (17-9-65)


## இந்து மாணவர் இயக்கம்

இலங்கையில் பௌத்தம், இஸ்லாம் முதலிய சமயங்களின் வளர்ச்சிக்காக வாலிப இயக்கங்கள் செய்துவரும் பணியைப் பாராட்டும் அதே சமயம் இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகமாக விளங்கும் இந்து சமூகத்தவர் சரியான முறையில் வாலிப இயக்கமொன்றை அமைத்து இந்து சமய, கலாசார வளர்ச்சிக்காகப் பணி புரிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டியுள்ளது.

ஆயிரத்து தொழாயிரத்து இருபதாம் ஆண்டு தொடக்கத்தில்யாழ்ப்பாணத்தில் இந்து வாலிப இயக்கம் தொண்டாற்றி வந்தது. வருடா வருடம் மார்கழி மாதத்தில் கீரிமலையில் மகாநாடும்நடைபெற்று வந்தது ப. முத்துக்குமாரு எம். ஏ., ஏ. குமாரசாமி எம். ஏ., எம். எஸ். இளையதம்பி மற்றும் பல சைவ, வீர இளைஞர்கள் இந்த இயக்கத்தைச்சிறப்புற நடத்தி வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட எல்லா இயக்கங்களுக்கும் ஏற்படும் முடிவு இந்த இந்து வாலிபர் இயக்கத்துக்கும் ஏற்பட்டு அது இருந்த இடம் தெரியாது ஒழிந்தது. பின்னர் திரு. சுந்தரலிங்கம் சர்வகலாசாலையில் வார்டனாகஇருந்த காலத்தில் அங்கு ஒரு இந்து வாலிப இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. வருடந்தோறும் மகாநாடும் நடைபெற்று வந்தது. இந்த இயக்கம்பற்றியும் இப்போது அதிக விபரம் இல்லை. இலங்கையில் கிறிஸ்தவ வாலிப இயக்கம் ஆர்வத்துடன்பெரும் பணி புரிந்து வந்தது. கிறிஸ்தவ மத வளர்ச்சிக்காக அந்த இயக்கம் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. தனது பணிகளுக்கும் முயற்சிகளுக்குமென கொழும்புக் கோட்டையில் தனக்கென அது சொந்தக்கட்டிடமும் அமைத்துக் கொண்டது. இதைப்பின்பற்றி பௌத்த வாலிபர்களும் தலைவர்களும் திரு. ஜயதிலகாவின் காலம் தொடக்கம் பௌத்த வாலிப இயக்கம் ஒன்றைத் தொடங்கி பொரளையில் காரியாலயம் ஒன்றை அமைத்துப் பணி புரிந்து வந்தனர். இன்று கொழும்புக்கோட்டையில் தமக்கென சொந்தமாக ஒரு கட்டிடம் அமைத்து பௌத்த மத கலாசார வளர்ச்சிக்காகப் பெரும் பணி புரிந்து வருகின்றனர். முன்னாள் கொழும்பு ஸாகிரா கல்லூரி அதிபர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் தலைமையில் முஸ்லிம் வாலிப இயக்கமும் தமது மத, கலாசார வளர்ச்சிக்கு உழைக்க முன்வந்தது. அந்த இயக்கமும் இன்று கொழும்புக் கோட்டையில் தனக்கென சொந்தமாகக் கட்டிடம் அமைத்துப் பணி

சைவமக்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணத்தில் கூட இதுவரை இந்து வாலிபர் இயக்கம் தனது பணியைச் செய்வதற்கும் யாழ்ப்பாணத்துக்குப் பிற நாடுகளிலிருந்து வரும் யாத்திரீகர்களுக்கு இந்து மதம், கலாசாரம்பற்றி உணர்த்துவதற்கும் தனக்கெனக் கட்டிடமோ காரியாலயமோ அமைத்துக் கொள்ளவில்லை. ஆனால் கொழும்பு கிறிஸ்தவ வாலிப இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளை யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக கட்டிடம் அமைத்துப் பணியாற்றுகிறது. இந்த இயக்கங்களின் முன்மாதிரியை இந்து சமய இளைஞர்களும் தலைவர்களும் ஏன் பின்பற்றவில்லை?

இந்துசமயத் தலைவர்களும், இந்துக் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் இவ்வித இயக்கங்களை ஆரம்பித்து இந்துசமய, கலாசார விருத்திக்குப் பணி புரிய ஏன்முன்வரவில்லை? இடையிடையேசில கூட்டங்கள் வைத்துப் பேசுவதால் மட்டும் சமயமும் கலாசாரமும் வளர்ச்சியடைந்துவிடுமா? அத்துடன் சமயப்பணி ஈடேறியதாக எண்ணிவிடுவதா?

இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் நாஸ்திகக் கொள்கைகளை மாணவர்கள் மனதில் புகுத்தி புரட்சி விதை விதைப்பதாகப் புகார் கூறப்படுவதுண்டு. பாரத நாடும் இலங்கையும் ஜனநாயக நாடுகள். இங்கு நாஸ்திகர்களுக்கும் இடமுண்டு அவர்கள் தமது கொள்கைகளை ஆர்வத்துடன் பயிற்சி வகுப்புக்கள் நடத்தியும் பரப்புகிறார்கள். சைவசமயத் தலைவர்களும் ஸ்தாபனங்களும் இந்து மாணவர்களுக்கு பாடசாலை நேரத்துக்குச் சமய நெறிகளையும் கலாசாரத்தையும் விளக்கி அவர்களைச் சரியான வழியில் திருப்ப வேண்டும். இவற்றைச் செய்வார்யார்?

இந்துசமய ஸ்தாபனங்களும் இந்துக் கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள், சமயத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இந்து மாணவர் இயக்கம் அல்லது இந்து வாலிபர் இயக்கம்ஒன்றை சரியான முறையில் அமைத்து இந்து சமயத்தையும் இந்துக் கலாசாரத்தையும் பேணி வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற இயக்கங்களில் அரசியல்வாதிகள் சுலபமாக நுழைவதும் இதனால் இயக்கங்கள் சிதறுண்டு போவதும் வழக்கம். இதற்கு இனியும் இடம் கொடாமல் அரசியல் வாதிகள் நுழையாத வகையில் இந்து இயக்கம் ஆரம்பித்து சமயத்தையும் கலாசாரத்தையும் வளர்க்கவேண்டும். இனியும் சோம்பி

## திருக்கேதீஸ்வரத் திருப்பணி

— சு. சிவசுப்பிரமணியம் —

“தொண்டர் நாள் தொறுந் துதிசெய
அருள்செய் கேதீச்சரமதுதானே.”
—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணி இப்பொழுது இந்துப் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துவருகின்றது. அவர்களுடைய உள்ளத்தில் ஓரளவு ஆவலும், ஏக்கமும் ஏற்பட்டுள்ளன. அக்கறையும், ஏக்கமும் மக்களுக்கு இயற்கையாக ஏற்படுவது உண்டு. ஆனால் தோல்வி மனப்பான்மையுற எத்தகைய காரணமுமே இல்லை. இந்தத் திருப்பணி இறைவன் எழுந்தருளும் திருக்கோயிலைக் கட்டுவது சம்பந்தமானது. மனிதனின் ஏனைய பணிகளைப்போல் அல்லாது, இப்பணி தலைசிறந்த ஆத்மீக, சமயப் பணியாகும். புராதன புனித க்ஷேத்திரத்தை புனருத்தாரணம் செய்வது இந்து சமயப் பணிக்கே தொண்டாற்றுவதாகும். இப்புனித தலத்தைப் பற்றி திருஞானசம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரம் ஓதி வழிபட்டமையால் இது பாடல் பெற்ற ஒரு தலத்தின் பணியாகும். மேலும், ஐந்தாவது குரவராகப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இத்திருக்கோயிலை புனருத்தாரணம் செய்வதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு சைவ நன்மக்களைத் தூண்டியுள்ளார். இது இறைவன் திருப்பணியாகும். ஆகவே அவன் விரும்பினால் தனக்குரிய கோவிலைக் கட்டிமுடிக்க வசதிகள் செய்துவைப்பான். அவனுடைய அளப்பருங் கருணைக்கு முன்னிலையில் சிற்றறிவும், சிறு தொழிலும் உள்ள மானிடராகிய நாங்கள், இத்திருப்பணிச்சபையில் பதவிவகிப்போராயினும்சரி அல்லது சபையோடு வேறுவகையில் தொடர் புள்ளோராயினும் சரி வெறும் தூசிகளே. ஆகவே, அந்தக் கருணைக் கடல்மீது நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். எங்கள் முக்கியத்துவத்தை முற்றாக மறந்துவிடவேண்டும். சந்தேகங்களை அகற்றிவிட வேண்டும். புனிதப் பணியில் தொடர்ந்து கடமையாற்றிவரவேண்டும்.

இத்திருப்பணி சம்பந்தமாகச் சில குறிப்புகளைக் கூறவிரும்புகிறேன். திருக்கேதீஸ்வரக்கோயில் புனருத்தாரண திருப்பணிச்சபையின் தலைவராகத் தொண்டாற்றியவர் காலஞ்சென்றதையிட்டு நாங்கள் எவ்வித பயமோ, சந்தேகமோ அடையத் தேவையில்லை. பிறக்கும் உயிர்கள் யாவும் இறக்கவேண்டிய கடப்பாடு உடையன. ஆனால் கோயில் திருப்பணி என்றும் நடந்துகொண்டே இருக்கவேண்டியதொன்று. கண்ணியம் மிக்க தலைவர் காலஞ்சென்றதால் சில நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. பணியை அங்கங்களாகப் பிரிப்பது, பொறுப்புகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றையே இங்கு குறிப்பிடுகின்றேன். சமய சம்பந்தமான சூழ்நிலையில் அதிகாரம் என்ற சொல்லை உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. எனினும், அதன் உபயோகம் தவிர்க்கப்படமுடியாததாய் இருக்கிறது. புனருத்தாரண சபையின் வேலைகளை நிறைவேற்றுவதற்கு அநேக உபதலைவர்கள் தேவைப்படும். சபை உத்தியோகத்தர்களும் தேவைப்படுவர். சம்பளம் கொடுத்து வைக்கவேண்டிய

வர். இந்த நோக்கங்களுக்கு ஏற்ற தொண்டர்கள் இந்துசமூகத்தில் இல்லாமல் இல்லை. இலங்கையிலுள்ள இந்து சமூகத்தினர், அதாவது இலங்கைத் தமிழரும், இந்தியத் தமிழரும், இலங்கையில் வசிக்கும் ஏனைய இந்து சமூகத்தினரும், இந்தியா, மலாயா ஆதியாம் நாடுகளில் வசிக்கும் ஏனைய இந்துக்களும் இப்புராதன புனித கோவிலைப் புனருத்தாரணம் செய்வதிலும், நடாத்துவதிலும் தங்களால் இயன்ற உதவியைச் செய்வது அவர்களுடைய புனிதமானதொண்டாகும். இலங்கையின் இன்னொரு புராதன கோவிலாகிய மஹியங்கானையின் புனருத்தாரணத்துக்கு உவந்து உதவியஎமது அரசாங்கம் திருக்கேதீஸ்வரப் புனருத்தாரணத்துக்கும் உதவியளிக்கலாம். இந்துக்கள்அல்லாத பிற சமயத்தவரும் இச்சிறந்த பணிக்கு உதவலாம்.

திருவருள்மேல் நம்பிக்கை வைத்தும், கண்ணியத்துடனும், இந்துப் பொதுமக்களும், திருக்கேதீஸ்வர அடியார்களும் இப்பணியில் ஈடுபட்டால் புனருத்தாரண வேலை இனிது நிறைவுறுமென்பது. யாரும் சொல்லாமலே விளங்கும். இந்த அடிப்படைக் கொள்கையில் நின்று தொழிற்பட்டால் மட்டுமே இப்புனித பணி இனிது நிறைவேறும்.

இவ்வுலகிலிருந்து மறைவதற்கு இரண்டு வாரத்துக்கு முன்பு நான் எழுதிய ஒரு கட்டுரையை வாசித்துவிட்டு சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எனக்கு எழுதிய தபாலில் பின்வருமாறு எழுதியிருந்தார்:

“திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி பத்திரிகைகளில் நீங்கள் எழுதியிருந்த கட்டுரையை வாசித்ததும் உங்களை அதற்காகப் பாராட்டி எழுத எண்ணிக்கொண்டிருந்தேன். தற்போதைய நிலைமையை இரத்தினச் சுருக்கமாகவும், உற்ற நேரத்திலும் அது எழுதப்பட்டிருந்தது... இறைவனின் திருவருள் உங்களுக்குக் கிடைக்குமாறு பிரார்த்திக்கிறேன்.”

அவர், எங்களோடு இன்று இருப்பாராயின் நான் இந்தக் கட்டுரையில் வெளியிட்டவற்றை ஆமோதித்திருப்பார் என்று தாழ்மையுடன் எண்ணுகிறேன்.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜனசேவைச்சங்க சமயப் பிரசாரசபையின் ஆதரவில் பின்வரும் தேவஸ்தானங்களில் இன்று பிரசங்கங்கள் நடைபெறவிருக்கின்றன.

நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் மாலை 7 மணி முதல் 8 மணிவரை திரு ச. சதாசிவம் “ஏனாதி நாயனார்” என்னும்பொருள் பற்றியும், மூத்தவிநாயகர் ஆலயத்தில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் “பெரியபுராணத்தொடர்ச்சி” என்னும் பொருள் பற்றியும் கதாப்பிரசங்கங்கள் நிகழ்த்துவர்.

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) யின் பொதுக்கூட்டம் நாளைமாலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் திரு. வி. ஏ. கந்தசாமி தலைமையில்நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் என். சண்முகதாசன், ஏ. ஜயசூரியா, சுப. இளங்கீரன் உட்பட வேறு

## களத்து மேடு

நெற்பயிர் வேளாண்மையைப் பொறுத்தவரையில் இலங்கையில் மூன்றுவகையான நிலங்கள் இருக்கின்றன. ‘மாதம் மும்மாரி’ என்று சொல்லக்கூடிய அளவில் மழை பெய்துகொண்டிருக்கும் தென்மேற்குப்பகுதி ஒன்று. இங்கு முப்போகமும் வேளாண்மை செய்யலாம். மூன்று அல்லது மூன்றரை மாதங்களுக்குள் விளைவுதரக்கூடியநெல்வகைகளை இவ்விடங்களில் விதைப்பார்கள். காலபோகமும் சிறுபோகமும் நெல்விளையக் கூடியதாய் குளங்களும் வடிவாய்க்கால்களுமுள்ள வன்னிப்பகுதி மற்றொன்று. இங்கே மாரிகாலத்தில் பெய்யும் மழையுடன் காலபோகமும் அந்தமழையினால் நிரம்பிய குளங்களில் தேங்கி நிற்கும் தண்ணீருடன் சிறுபோகமும் நெல்விளைச்சல் நடக்கின்றது. காலபோகத்துக்கு நீண்டகாலப் பயிரும் சிறுபோகத்துக்கு குறுகிய காலப் பயிரும் தெரிவுசெய்யப்படும். மூன்றுவது, மாரி காலத்து மழை ஒன்றையே நம்பியிருக்கும் வானம் பார்த்த பூமி. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் மட்டக்களப்பில் சிலபகுதிகளும் இந்த இனத்துக்குள் வரும்.

மழை வீழ்ச்சியையும் வடிகால் வசதிகளையும் பொறுத்து அந்தந்த இடங்களில் விதைநெல்லை தெரிவுசெய்வார்கள். யாழ்ப்பாணத்தவர்கள் தலைமுறை தலைமுறையாக தங்கள் வயலில் விளைந்த நெல்லிலேயே விதை நெல்லுக்கும் ஒதுக்கிவைப்பார்கள். வேறு புதிய இன நெல்லை விதைத்து சோதனை பார்க்க அவர்கள் அதிகம் விரும்புவதில்லை. போனவருடம் வேளாண்மை தவறி விட்டபடியால் விதை நெல்லே கிடைக்காமல் திண்டாடுபவர்கள்இந்தவருடம் வேறு இன நெல்லை விதைத்துப் பார்த்தால் என்ன?

இந்தியாவில் சின்னச் சம்பா, பெரிய சம்பா, சீரகச்சம்பா, சிறுமணிச்சம்பா, இலுப்பைச் சம்பா, ஊசிச் சம்பா, மல்லிகைச் சம்பா, கம்பன் சம்பா, குங்குமச் சம்பா, கோடைச்சம்பா, முத்துச்சம்பா, மோரன் சம்பா, செம்பாளை, பூம்பாளை, மலைகுலுக்கி, மடு விழுங்கி, முட்டைக்கார், கடப்புக்கார் என்று இன்னும் எத்தனையோ வகையான நெல் சாகுபடியாகின்றன, இலங்கையிலும் மின்னேரி குருநாக்கல், கேகாலை முதலிய இடங்களில் பலசம்பாவகை இன்றும் உற்பத்தியாகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் பெரிய வெள்ளை இளங்கலையன், சின்ன வெள்ளை இளங்கலையன், பொட்டைக் கறுப்பன் முதலிய நாலைந்து இனங்களையே திரும்பத்திரும்ப விதைக்கிறார்கள். விவசாயப் பகுதியினரும் பல நோக்கச்சங்கங்களும் வேறு புதிய இன நெல்லை சிபார்சு பண்ணிக் கொடுத்தாலும் அதை விதைக்க மறுத்து விடுவார்கள்.

பல சங்கங்கள் ‘எச்போர்’ என்ற சாதி நெல்லை விதைப்புக்கு கொடுக்க முன்வந்துள்ளதாகவும் அதை எல்லோரும் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரியவருகிறது. அறுவடை காலத்தில் இந்த நெல்லை அடித்து வைக்கோலிலிருந்து தானியத்தைப் பிரிப்பது மிகவும் கடினமான வேலை என்று கமக்காரர் சாக்குச் சொல்லுகிறார்கள். இந்த இனத்து நெல் சோற்றுக்கும் நன்றாயிராதென்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகோர சண்டைக்குப் பின் முக்கிய பாகிஸ்தான் நிலை பிடிபட்டது

## லாகூருக்கும் இதர பாக். பகுதிக்குமான தொடர்புக்கு ஏற்பட்டுவரும் அபாயம்

### பாக். குண்டு வீச்சுக்கு 150 பொதுமக்கள் பலி!

### இருதரப்பிலும் 2459 வீரர்கள் செத்தனர்

சீனுவுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை; இன்றிரவு பாதுகாப்பு சபைக் கூட்டம்

புதுடில்லி, செப். 16

ஸியால் கோட்டுக்குத் தென்கிழக்கே 4 மணி நேரம் நடைபெற்ற பயங்கரச் சண்டைக்குப் பின், பாகிஸ்தானின் முக்கிய இலக்கு ஒன்றை இந்தியத் துருப்புகள் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சண்டையில் பாகிஸ்தானுக்குச் சொந்தமான 10 பேட்டன் டாங்கிகள் அழிக்கப்பட்டன. இத்துடன் சேர்த்து ஸியால் கோட் பகுதியில் மட்டும் 100 பாகிஸ்தான் டாங்கிகள் அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அக்னூர் பகுதியில் பாகிஸ்தான் துருப்புகள் பலமுறை நடத்திய பீரங்கித் தாக்குதல் காரணமாக 5 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

## பாகிஸ்தான்-லாகூர் தொடர்புக்கு அபாயம்

ஜம்மு-ஸியால் கோட் அரங்கில் விரைவான பக்கவாட்டு தாக்குதல் ஒன்றை ஆரம்பித்ததின்மூலம் ஸியால் கோட்டுக்கும் பஸ்ரூருக்குமிடையேயான கேந்திர ரயில் பாதையை இந்தியா பிடித்த செய்தி முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக லாகூருக்கும், பாகிஸ்தானின் இதர பகுதிகளுக்குமிடையே ரயில், சாலைப் போக்குவரத்து தொடர்புக்கு பேரபாயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியத் துருப்புக்கள் லாகூர் பிரதான நகரத்திலிருந்து இப்போது 7 மைல் தூரத்திற்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

டிட்வால் பகுதியில் இந்தியா பிடித்த நிலைகளைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இப்பகுதியில் பாகிஸ்தானின் முன்னணி துருப்புகள் பின்வாங்கியிருக்கின்றன.

சர்கோபா விமானநிலையம் 4 முறை விமானத் தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இதன் விளைவாக கணிசமான சேதம் ஏற்பட்டது.

## பாகிஸ்தான் தாக்குதல்

இந்திய விமானத்தளம் ஒன்றை பாகிஸ்தானிய விமானங்கள் காலை 6 மணி முதல் 12 1/2 மணிவரையில் 8 முறை தாக்கியதாக அறிவிக்கப்பட்டது. பதான் கோட் பகுதியில் இருமுறை அவைகள் குண்டு வீசின.

## 150 சிவிலியன்கள் பலி

நேற்று கொச்சி கடற்படைத் தளத்தின்மீது இருமுறை காணப்பட்ட அடையாளம் தெரியாத விமானங்கள் விரட்டப்பட்டன.

ஜம்மு பகுதியில் பாகிஸ்தான் ஜெட்விமானங்கள் சிவிலியன் வண்டிகளையும், கிராமங்களையும் குண்டுவீசித் தாக்கின. இதனுல் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் விமானங்கள் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகியவற்றில் சிவிலியன்கள்மீது கண்மூடித்தனமாக குண்டு வீசியதால் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டதாயும், 260 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது. கூச்பீகார் எல்லைப் பட்டினங்கள்மீதும் பாகிஸ்தானியர் பீரங்கிப் பிரயோகம் செய்தார்கள். நேற்று லாகூர் விமான நிலையத்திலிருந்து 600 அமெரிக்கப் பிரஜைகள் வெளியேற்றப்பட்டார்கள். இப்போது இந்தியத் துருப்புகளின் அனுமதியின்றி லாகூர் விமான நிலையத்தில் எந்த விமானமும் இறங்க முடியாது என டில்லியில் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இச்சண்டையில் பாகிஸ்தான் பெருமளவு ஆட்களையும், சாதனங்களையும் இழந்துவிட்டதாக இந்திய அரசாங்க அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

## 2459 வீரர் பலி

இந்தியா கைப்பற்றிய 32 டாங்கிகள் உட்பட மொத்தம் 284 டாங்கிகளையும் 55 விமானங்களையும் பாகிஸ்தான் இழந்துவிட்டதாய் இந்த அறிவிப்பு மேலும் கூறியது.

16 பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளும், 1831 பாகிஸ்தான் வீரர்களும் கொல்லப்பட்டார்கள் என்றும், 7 அதிகாரிகளும் 320 பாகிஸ்தான் வீரர்களும் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் அதே அறிவிப்புக் கூறியது.

இந்தியத்தரப்பில் 37 அதிகாரிகள் உட்பட 612 பேர் கொல்லப்பட்டதாய் அது தொடர்ந்து கூறியது.

### சண்டை தொடரும்

நேற்று இந்தியப் பிரதமரின் சார்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில், . பாகிஸ்தானின் தற்போதைய மனப்போக்குக் காரணமாக இந்தியா சண்டையைத் தளரா தீவிரத்துடன் நீடிக்குமென கூறப்பட்டது.

### 3 அம்ச யோசனை

சண்டை நிறுத்தத்திற்குப் பாகிஸ்தான் 3 அம்சக் கோரிக்கையை வலியுறுத்துகிறது. போர் நிறுத்தம் காஷ்மீரிலிருந்து இருதரப்பு துருப்புக்களும் வெளியேறுதல், மூன்று மாதத்தில் காஷ்மீரில் தேர்தல் நடத்துதல் ஆகியனவே அவை.

### சுவர்ண்சிங்

இந்திய வெளிநாட்டு மந்திரிசர்தார் சுவர்ண்சிங் நேற்று விடுத்த அறிக்கையில் பாகிஸ்தானின் முன் நிபந்தனை காரணமாக யுதாண்டின் போர் நிறுத்த நோக்கம் சீர்குலைந்துவிட்டது என்ருர். ''ஜம்மு-காஷ்மீர் நமது பகுதி. சண்டையை நிறுத்துமாறு பல உலகத் தலைவர்கள் விண்ணப்பித்திருப்பதற்கு இந்தியா மதிப்புக்கொடுக்கிறது. ஆனுல் கடைசிவரை பாகிஸ்தான் பிடிவாதம் காட்டிவருவதால் பலனெதுவுமில்லை'' என்றும் சுவர்ண்சிங் கூறினுர்.

### இரகசிய தஸ்தாவேஜு பிடிபட்டது

12 வது பாகிஸ்தானிய டிவிஷன் தளபதி மேஜர் ஜெனரல் ஹுஸெய்ன் கையெழுத்திட்டுள்ள அந்தரங்க தஸ்தாவேஜு ஒன்றை இந்தியா கைப்பற்றியிருக்கிறது. பாகிஸ்தான் காஷ்மீரில் ஊடுருவல் செய்த விஷயமும், ஊடுருவல்காரர்கள் எந்தெந்த உபாயத்தைக் கையாளவேண்டும் என்ற விபரத்தையும் இந்த தஸ்தாவேஜு நிரூபிக்கிறது. இதன் மூலப் பிரதி நேற்று வெளிநாட்டு நிருபர்களுக்குக் காட்டப்பட்டது.

### பாதுகாப்புச் சபைக் கூட்டம்

நாளை இரவு 8 மணிக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடி, காஷ்மீர் நிலைமைபற்றி விவாதிக்கும். இந்தியா, பாகிஸ்தான் வந்திருந்த யுதாண்ட் அதற்கு முன் நியூயோர்க் திரும்பிவருவார் என்றும், சபையில் அவர் தனது பிரயாணம்பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

### கடிதப் போக்குவரத்து

யுதாண்ட்-அயூப் கடிதப் போக்குவரத்தும், யுதாண்ட்-சாஸ்திரி கடிதப் போக்குவரத்தும் நேற்று நியூயோர்க்கில் வெளியிடப்பட்டது. அதன் விபரம் இன்னும் டில்லியில் வெளியாகவில்லை.

### பாக். மறு பரிசீலனை செய்யும்

காஷ்மீரில் வாக்கெடுப்பை நடத்த ஐ. நா. வுக்கு முடியாவிட்டால், ஐ. நா. வுடனுன தொடர்புபற்றி பாகிஸ்தான் மறு பரிசீலனை செய்யவேண்டியிருக்குமென பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோ கூறியிருக்கிருர்.

சீனுவும் பாகிஸ்தானும் மிக நெருங்கி ஒத்துழைத்து [illegible]

## எல்லா முனைகளிலும் இந்திய துருப்புக்களுக்கு பலத்தசேதம்

### பாகிஸ்தான் அறிவிப்பு

ராவல்பிண்டி, செப். 16

இந்தோ-பாகிஸ்தான் சண்டையில் வெற்றிகரமாகச் செயலாற்றிவருவதுகுறித்து பாகிஸ்தான் ராணுவ விமானப் படைத் தலைவர்கள் அனைவருக்கும் ஜனுதிபதி அயூப்கான் பாராட்டுத் தெரிவித்திருக்கிருர்.

நேற்று சியால்கோட் பகுதியில் 8 இந்திய டாங்கிகளை நாசமாக்கியதாகப் பாகிஸ்தான் வானெலி அறிவித்தது. பல முனைகளிலும் பாகிஸ்தான் துருப்புகள் இந்தியத் துருப்புக்களுக்குப் பலத்த சேதம் விளைவித்திருப்பதாயும் அது தெரிவித்தது. கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் புதிய இந்தியத் துருப்புக்கள் பெருமளவு குவிக்கப்படுவதாகவும் அது கூறியது.

பாகிஸ்தான் வந்திருந்த ஈரான் பிரதம மந்திரியும், துருக்கி வெளிநாட்டு மந்திரியும் தாயகம்புறப்பட்டனர்.

### இந்தோனேஷியாவில்

மேற்கு ஜாவாவிலுள்ள இந்தியர்களின் சொத்துக்களை இந்தோனேஷியா எடுத்துக்கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. அங்குள்ள இந்தியத் தூதராலய ஊழியர்களின் குடும்பங்கள் இப்போது தாயகம் திரும்பிவருவதாக அறிவிக்கப்பட்டது.

### ஜோன்ஸன்

சமாதானத்துக்காகத் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதாகவும், ஆனுல்

டிவிடவும் முயல்வதாக வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதர் திரு. பி. கே. நேரு கூறினுர். இப்படித் தூண்டிவிடுவதன்மூலம் பாரதத்துடன் பாகிஸ்தான் சமநிலைக்குவர சீனு சூழ்ச்சித் திட்டம் வகுத்திருக்கிறதென்றும் அவர் கூறினுர்.

### அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

இதற்கிடையில் இந்தியா-பாகிஸ்தான் தகராறில் தலையிடவேண்டாமெனச் சீனுவுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. லண்டனிலுள்ள இந்தியத் தூதர் திரு. மேத்தா நேற்று பிரிட்டிஷ் பிரதமர் வில்சனைச்சந்தித்து இந்தோ-பாக். நிலைமைபற்றிப் பேசினுர்.

### பாகிஸ்தானுக்கே அதிக சேதம்

டில்லியிலுள்ள ''லண்டன் டைம்ஸ்'' பத்திரிகை நிருபர் தமது பத்திரிகைக்கு அனுப்பியுள்ள செய்தியில் இந்திய ராணுவமும், விமானப்படையும் பெரும் சாகஸத்தை ஏற்படுத்தியிருப்பதாயும், பாகிஸ்தானின் ராணுவப்பலம் அநேகமாகச் சீர்குலைந்துவருவதாயும் கூறியிருக்கிருர். இந்தியாவுக்கு ஆள், ஆயுத சேதம் அதிகமில்லையென்றும், பாகிஸ்தானுக்கே அதிகமென்றும் அவர் கூறியிருக்கிருர்.

### பாக். ஊழியர் கைது

இதற்கிடையில் கெய்ரோவிலுள்ள பாகிஸ்தான் தூதராலய ஊழியர் ஒருவரை ஐக்கிய அராபிய அரசாங்கம் கைதுசெய்திருக்கிறது. ஜனுதிபதி நாஸருக்கெதிராக சமீபத்தில் நடைபெற்ற சதியில் இவர் பங்குகொண்டிருந்தார் எனக்குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

சண்டையை நிறுத்துமாறு மேற்குஜெர்மனி இருநாடுகளுக்கும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது.

ஐ. நா. மூலமே சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டும் என்றும் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிருர்.

### பிரிட்டன் ஆலோசனை

இந்திய - பாகிஸ்தான் சண்டை பற்றி பிரிட்டன் காமன்வெல்த் நாடுகளுடன் ஆலோசனைசெய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிசெய்வது சாத்தியமில்லையென அறிவித்துவிட்டதாய் லண்டன் செய்திகள் கூறுகின்றன.

## கானு-ஜெர்மன் புதிய உறவு

பெர்லின், செப்.16

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு கானுவுடன் செய்துகொண்டுள்ள பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தால் இருநாடுகளின் நல்லுறவில்புதிய சகாப்தம் தோன்றியுள்ளது என்று கானுவுக்கும் கினியாவுக்கும் விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவி வர்த்தக மந்திரி கூறினுர். கானுவில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசால் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைகள் பற்றியும் அவர் விளக்கினுர்.

இரு நாடுகளிடையே 1964-ல் 320 லட்சம் மார்க் வர்த்தகம் நடந்துள்ளது. அது இவ்வருடம் 400 லட்சம் மார்க்காக கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்துறையிலும் விவசாயத் துறையிலும் கடந்த சில ஆண்டுகளில் கானு அடைந்துள்ள பெரும் அபிவிருத்தி வியக்கத்தக்கது என்று உதவி வர்த்தக மந்திரி மேலும் தெரிவித்தார்.

## ஜெர்மன் அரபு நட்பு

பெர்லின், செப்.16

ஜெர்மனிக்கும் அரபுநாடுகளுக்குமிடையே நட்பும் நல்லுறவும் மென்மேலும் வளர்ந்து வருவதாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஜனுதிபதி திரு.வால்ட்டர் உல்பிரிச் ''அக்பார் எல்ருயோம்'' என்னும் ஐக்கிய அரபுக் குடியரசு பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியிற் கூறினுர். 10 அரபுநாடுகள் மேற்கு ஜெர்மனியுடன் இராஜதந்திரத் தொடர்புகளை துண்டித்துக்கொண்டதையும் அவர் குறிப்பிட்டார்.

வியட்னுமில் அமெரிக்கா நடத்தும் ஆக்கிரமிப்பை உடனடியாகக் கைவிடும்படி உலகம் முழுவதுமுள்ள சமாதானப்பிரியர்கள் அமெக்காவை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று திரு. உல்பிரிச் கருத்துத் தெரிவித்தார். ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்காகத் தாங்கள் சமர்ப்பித்த திட்டங்களையெல்லாம் மேற்குஜெர்மனி நிராகரித்ததைப் பற்றி அவர் கவலை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல இடங்களில் பாரதி விழா

உடுப்பிட்டி, வியா

''தனியொருவனுக்குஉண வில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடிய பாரதி, ஏழைப் பாட்டாளி மக்களின் தோழன்; அவன் ஆஸ்தானக்கவிஞர்கள் போன்று மன்னரையும், பிரபுக்களையும் போற்றவில்லை. சாதாரண மக்களின் இன்ப-துன்பங்களும், சமுதாயப் பிரச்சினைகளுமே பாரதியின் எளிய, இனிய கவிதைகளில் பிரதிபலிக்கின்றன.'' இவ்வாறு துன்னாலை தெற்கு பாரதி நாடக மன்றத்தினரால் முற்போக்கு வாலிபர் சங்கநிலையத்தில் நடாத்தப்பட்ட பாரதிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. பு. சிவயோகம் கூறினார்.

திரு. த. இராசா பேசுகையில் ''பெண்கள் முன்னேறவேண்டும், மூடநம்பிக்கைகளும் வீணான அடிமைத்தனமும் மடியவேண்டும் என்பதற்காகப் புதுமைப் பெண்ணைப் பாடிய பாரதி இன்றிருந்தால் இன்றைய நவநாகரிகப் புதுமைப் பெண்களைப் பார்த்து வெட்கப்பட்டிருப்பார்'' என்று சொன்னார்.

திருவாளர்கள் திரவியம், இராசையா ஆகியோருட்படப் பலர் பேசினர். அமரகவி பாரதியின் உருவப் படத்தை திரு. என். கணேசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

### மாவிட்டபுரத்தில்

''பாரதி ஒரு பிரதேசத்துக்கோ, ஓரின மக்களுக்கோ உரிமையானவர் அல்லர். அவர் பேராறு போன்றவர். பேராறு எல்லாப் பிரதேசங்களிலும் பாய்வதுபோல தமிழ்மீது அன்புகொண்ட அனைவருக்கும் பாரதி சொந்தமானவர்'' என்று கம்பன் கலைக் கழகம் நடத்திய பாரதி விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. த. சண்முகசுந்தரம் குறிப்பிட்டார்.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் கம்பன் கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதிவிழாவில் திரு. சண்முகசுந்தரம் தொடர்ந்து பேசியதாவது:

பாரதி தமிழுக்குத் தொண்டு செய்ததுபோல, தமிழ்க்கலை வளர்ச்சியில் கலைக்கழகங்கள் ஈடுபட வேண்டும். இயல், இசை, நாடகத்துறையில் கழகங்கள் தமது கவனத்தை நன்கு செலுத்தினால் நமது நாட்டின் கலைத்தரம் நன்கு உயரும்.

திரு. ஆ. கு. சிவபாலசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். பண்டிதர் இ. நமசிவாயம் வாழ்த்துரை வழங்கினார். புலவர் மயிலை சிவ. சண்முகதாசன் 'போலிகள்' என்பது பற்றியும், இசைப் புலவர் சி. நடராசா 'பாரதியின் சமயப்பண்பாடு' பற்றியும், வித்துவான் வேல்மாறன் 'காதல் நெஞ்சம்' பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை பாராட்டுரை வழங்கினார்.

திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

ஈழத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளையும் வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட கம்பன் கலைக்கழகம், கலைஞர்களை ஊக்குவித்து ஈழத்தில் இசைக்கலை வளர்ச்சிக்கும், நாடக வளர்ச்சிக்கும் பாடுபட முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இசைமணி எம். ஆனந்தசிவம் பாரதி கவிதைகளைப் பாடினார். சுன்னாகம் முக்கலைப் பயிற்சி நிலையத்தினரின் நாடகமும் நடைபெற்றது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
GEORGE NADER
IN
SECRET MARK
of
DARTAGNAN
(Totalscope - Eastman Color)


# இராணுவ சேவைக்கும் 'பென்ஷன்' திட்டம்?

பம்பலப்பிட்டி, வியா.

இராணுவப்படையினருக்கு 'பென்ஷன்' வழங்குவது பற்றிய நிதிநிலைமையை ஆராய்ந்து ஒரு அறிக்கையைச்சமர்ப்பிக்கும்படிதிறைசேரிக்கு உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மந்திரிசபைக்கும் சமர்ப்பிக்க ஒரு மகஜர் தயாராகின்றது. 'பென்ஷன்' சேவையில் இராணுவத்தினரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மந்திரிசபை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இது போன்று இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன் முதலிய நாடுகளில் பென்ஷன் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருவதகா பாராளுமன்றத்தில் கல்வி மந்திரியின் உதவிக் காரியதரிசி திரு காமினி ஜெயசூரியா அண்மையில் குறிப்பிட்டிருந்தார். பென்ஷன் திட்டத்தை கிறேஷியன் அறிக்கையும் இராணுவத்தினருக்கு அங்கீகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# 'கிராம வளர்ச்சிக்கு மக்கள் உழைக்கவேண்டும்'

குரும்பசிட்டி, வியா.

''சாதி சமய அரசியல் பூசல்களில்நின்று விடுபட்டு சமூக முன்னேற்றத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். பொருளாதார வளர்ச்சியில் கிராமங்களை வழிநடாத்தக் கூடியன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமேயாகும். கட்சிப் பகைமையும் குடும்பக் குரோதங்களையும் மறந்து சொந்த கிராம வளர்ச்சிக்கு மக்கள் ஒன்றுசேர்ந்து உழைத்தல்வேண்டும்'' மீசாலை வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்க விசேஷ பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட தென்மராட்சிப் பகுதி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

''யாழ். மாவட்டத்திலுள்ள வளரும் விவசாயிகளுக்கு மேலும் கடன்வசதிகளைவிஸ்தரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். விளைச்சலை அதிகரிக்க கடன்களை அளிப்பது மட்டுமன்றி விளைபொருட்களை முற்றுக வாங்கும் பொறுப்பும் அரசாங்கத்தினதேயாகும். சங்கங்களை வழிநடத்துவோர் சுயநலம் கருதாது லஞ்சம் மலிந்த ஊழியர்களின் கையாட்களாக மாறக்கூடாது. பொதுமக்கள் நலன்களின் அக்கறை செலுத்தி நீதியாக உழைத்தல் வேண்டும்.'' வேறு பலரும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

# அதிகரிக்கும் சைக்கிள் திருட்டு

வவனியா, வியா.

வவனியாவில் சைக்கிள் திருட்டு அதிகரித்துவருகிறது. கடந்த ஒரு வாரமாக இந்தத் 'தொழில்' தீவிரமாக நடைபெறுகிறது. பொது இடங்கள், அரசாங்க தனியார் காரியாலயங்களில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வமான காரியம் பார்க்க வவனியா புகையிரத நிலையத்திற்கு வந்த தபால் ந்தோரைச் சேர்ந்த திரு. ரி. சிவலோகநாதன் என்பவரின் சைக்கிள் நேற்றிரவு பத்து மணியளவில் களவாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# "தமிழ் மொழியும், இசைக்கலையும் தெய்வீகமானவை"

## இசைவிழாவில் நீதியரசர் பேச்சு

சாவகச்சேரி, வியா.

'தமிழ்மொழியும் இசைக் கலையும் தெய்வீகமானவை. தமிழை ஒருவராலும் அழிக்க முடியாது. மேல்நாடுகளில் தமிழ்க்கலை, கலாச்சாரங்களுக்குப் பெரும் மதிப்புண்டு. அப்படியான பெருமை வாய்ந்த எமது கலைகளை வளர்த்துக் கலைத் தொண்டு புரிந்து தமிழ்ச் சேவையாற்ற வேண்டியது எமது கடமை முக்கியமாக இளைஞர்கள் இப்பணியைச் சிறப்புறச் செய்ய வேண்டும்''.

இவ்வாறு நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா தென்மராட்சிஇசைக் கலை மன்றத்தின் 10-வது ஆண்டு இசைவிழா இறுதி நாள்நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''எமது மத்தியில் பலமன்றங்கள் தோன்றுகின்றன. ஆனால் அவையெல்லாம் நிரந்தரமாகநிலைநிற்கின்றன வல்ல. அந்தச் சூழ்நிலையில் இந்த தென்மராட்சி இசைக் கலைமன்றம் தனது 10-வது ஆண்டுவிழாவை நடாத்துகின்றது. அவர்கள் இசைக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிவரும் மகத்தானசேவையை நான் தமிழ்மக்கள் சார்பில் பாராட்டுகிறேன்''.

நீதியரசர் திரு. தம்பையாவை வரவேற்றுப் பேசிய சாவகச்சேரி எம்.பி. திரு. வி என். நவரத்தினம் கலைத் தொண்டாற்றிவரும் சிறந்த கலைஞராகிய நீதியரசர் தம்பையாவை வரவேற்பதில் பெருமையடைகிறோம் என்று கூறினார்.

இசைக்கலை மன்றத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன் நன்றிகூறினார்.

# மணவாளக்கோல விழா

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறையைச் சேர்ந்த நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன்கோயில் வருடாந்த மணவாளக்கோல விழா வெகு சிறப்புடன் நடைபெற்றது. பகல் விசேஷ அபிஷேகங்களும் அன்னதானமும்நடைபெற்றதுடன் இரவு விசேஷ நிகழ்ச்சிகளுடன் அம்பாள் வீதிவலம் எழுந்தருளி அடியார்களுக்குக் காட்சியளித்தார்.

# கட்டுநாயக்காவில் சுறு சுறுப்பு

பம்பலப்பிட்டி, வியா.

இந்தியா-பாகிஸ்தான் சண்டை ஆரம்பித்த பின்னர் கட்டுநாயக்கா விமானத் தளத்தில் விமானங்கள் பல நேரங்களிலும் வந்து செல்வதற்கு தற்பொழுது 'பிரிட்டிஷ் ஓவர் ஸீஸ் ஏயர்வே' ஸ்தாபனத்திற்கே உரிமை வழங்கப்பட்டுள்ளது.

கிழமைகளில் 37விமானங்கள் இலங்கை ஊடாகச் செல்லுமெனத் தெரியவருகிறது. தற்பொழுது கட்டுநாயக்கா விமானத்தளம் சுறு சுறுப்பாகவும் உலகப் பிரசித்திவாய்ந்த ஒரு விமானத்தளம் போலவும் காட்சி அளிக்கின்றது.

கட்டுநாயக்காவில் வந்து இறங்கும் விமானங்களை 'ஏயர் சிலோன்' ஊழியர்களே கவனித்துவருகின்றார்களென்றும், 24 மணித்தியாலங்கள் தொடர்ந்து அவர்கள் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் தெரியவருகிறது.

உடுப்பிட்டி, வியா.

கரவெட்டிகிழக்குகணகரா வழவுப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகவிழா 10-ம் நாளான இன்று, சமயப்பிரசங்கத்தொடரில் தேவார சங்கீத பூஷணம் சி. செ. நடராசா 'இசை நிகழ்ச்சி' என்னும் பொருள் பற்றி மாலை 7 மணியளவில்சொற்பொழிவு நிகழ்த்துவார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்



## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

### பண்டகசாலைப் பொறுப்பாளர் பதவி விண்ணப்பம்

இராமநாதபுரம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கப் பண்டகசாலைக்கு ஒரு பொறுப்பாளர் தேவை. பின்வரும் தகமைகளுடையோர் விண்ணப்பிக்கவும்.

1. சிரேஷ்ட தராதரப் பத்திரம். 2. வயது:. 25 தொடக்கம் 40 வரை. 3. கூட்டுறவுப்பயிற்சித்தராதரப்பத்திரம். 4. பிணைரொக்கம் ரூபா 1000/: ஆதனம் ரூபா 2000/- 5. வேதனம் ரூபா 110/- (எல்லாம் உட்பட) திறமைக்கேற்ப கூடிய வேதனம் பின் வழங்கப்படும். 6. விண்ணப்ப முடிவு திகதி 24-9-65. 7. வியாபார அனுபவமுடையவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர் இராமநாதபுரம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம் கிளிநொச்சி'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

வி. சின்னையா,
தலைவர்.
15-9-65 857




### கொழும்பு

வெள்... 17-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரபாடல்கள், 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 உரைச்சித்திரம், 7-15 பாட்டு, 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி. 9-15பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 புல்லாங்குழலிசை, 10-15 தேர்ந்தஇசை.

### மருத்துவவிடுதி திறப்பு விழா

துணுக்காய், வியாழன் மல்லாவி வைத்தியசாலையில் புதிதாக காணி அபிவிருத்திச் சபையினரால் கட்டி முடிக்கப்பட்ட பிரசவ, மருத்துவ விடுதிகளை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் வருகிற நவம்பர் மாதம் 6-ம் திகதி திறந்துவைக்கவிருக்கிறார். திறப்பு விழாவிற்கான ஒழுங்குகளை இவ்வைத்தியசாலைப் பொறுப்பாளர் டாக்டர் திரு. எஸ். ஜீவகடாட்சம் செய்துவருகின்றார்.

இந்த பிரசவ விடுதியில் முதல் பிறக்கும் குழந்தைக்கு பரிசு கொடுப்பதற்கு இக்கட்டடத்தைக் கட்டிய காணி அபிவிருத்திச் சபையின் மல்லாவிக் கிளையின் பொறுப்பாளர் திரு. பி. இராசா முன்வந்துள்ளதாக




## வதிரி பொமேஸ் சாம்பியன்

உடுப்பிட்டி, வியா.

கரவெட்டி, சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வந்த ''நொக் அவுட்'' கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சென்ற 12-ம் திகதி மாலை இமையாணன் கோஷ்டிக்கும் வதிரிக்கோஷ்டிக்கு மிடையில் நடைபெற்றது. இருகோஷ்டியினரும் ஒவ்வொன்றை வென்று, மூன்ருவது ஆட்டத்தில் இமையாணன் 14ம், வதிரி 6ம் எடுத்த சமயம் விளையாட்டு மிக உச்சக் கட்டத்தையடைந்தது. பொமேஸ் வீரர் சளைக்காமல் விறுவிறுப்பாக ஆடி வெற்றியீட்டிச் சாம்பியன் ஆகினர். சாம்பியன் கோஷ்டியின் உற்சாகமான ஆட்டத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுப்பிட்டி எம்.பி. திரு மு. சிவசிதம்பரம் பாராட்டிப்பேசினர்.

## யூனியனுக்கு வெற்றி

குரும்பசிட்டி, வியா.

தெல்லிப்பழை ஆனந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரி வீரர்கள் மிகத் திறமையாக விளையாடி 4—1 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தனர். திரு. ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றிய இப்போட்டி யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

உதைபந்தாட்டம்

## இறுதிப் போட்டிக்கு கடற்படைக்குழு தகுதி

திருக்கோணமலை, வியா.

அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் அகில இலங்கை உதைபந்தாட்ட சாம்பியனைத்தெரிவு செய்யும் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைஇலங்கைக்கடற்படை குழுபெற்றுள்ளது.

அரை இறுதிப்போட்டி ஒன்றில் திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் குழு 1 — 0 கோல்களால் தோற்கடித்ததைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படைக் குழு இத்தகுதியைப் பெற்றுள்ளது.

# "சாதித்தடிப்பு உள்ளவர்கள் உண்மையான சைவர்களல்ல"

## ஆண்டு விழாவில் திரு. சிவசிதம்பரம் பேச்சு

உடுப்பிட்டி, வியாழன்

''மனித சமூகத்தின் பரம்பரைவரலாறு பற்றிய டார்வினின் பரிணமதத்துவத்தை ஏற்கனவேயே நமது சைவப்பெரியார் மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவாசகத்தில் கூறியுள்ளார்கள். இன்னும் மனிதன் தனது வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பதுன் பங்களையும் சைவசமயம் நமக்குப் புராணக் கதைகள் மூலமும் தேவாரங்கள் மூலமும் எடுத்துக்காட்டுகிறது. சாதியைச் சைவம் படைக்கவில்லை. ஒரு சாரார் தாம் மற்றவர்களைச் சுரண்டி முன்னேறுவதற்காகச் சற்றுப் படிப்புக்குறைந்தவர்களைத் தொழில் ரீதியாகப் பிரித்துக் காட்டி விட்டனர். அன்று அவர்கள் பிரித்து வைத்தது இன்று ஓயாத தொல்லையாக இருந்து வருகிறது. சைவசமயம் சாதிப் பிரச்சனைக்குத் துணையாக இருக்குமானல் அது மெய்ச் சமயமல்ல. சாதித்தடிப்பு மிக்கவர்களும் உண்மையான சைவர்கள் அல்ல'' இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கரவை சைவநெறிக் கழகத்தின் 10-வது விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கரவெட்டியில் நடைபெற்ற இவ்விழாவில் திரு சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் சாதிப் பிரச்சனை இருப்பதையிட்டு நான் மிகவும் வெட்கப்படுகிறேன். தமிழினம் தனக்குள் இன்னோர் பகுதி மக்களைத் தாழ்த்திக் கொண்டு சிங்கள மக்களிடம் தனக்கு உரிமை கொடுக்கும்படி எவ்வாறு கேட்கலாம்? முதலில் நம்மை நாமே திருத்திக் கொண்டு நாம் அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டும். நமது ஒற்றுமைதான் எதிரிக்குப் பயத்தை ஏற்படுத்தும். சைவம் இனிமேலாவது சாதிப் பாகுபாடு காட்டுவதை விட்டுவிட வேண்டும். போலிவேஷம் போடும் பக்தர்களுக்கு ஆண்டவனிடம் இடமில்லை.''

சுகாதாரப் பகுதி விரிவுரையாளர் திரு. எஸ்.பொன்னம்பலம் பேசுகையில், மனச்சுத்தத்தைச் சைவசமயம் மிகவும் வற்புறுத்துகிறதென்றும் உள்ளத்திலே கள்ளமில்லாதவர்கள் இறைவன்மீது அன்பு வைத்து முத்தியடைந்த வரலாற்றை நமது நாயன் மார்களின் கதைகள் கூறுகின்றனவென்றும் சொன்னர்.

கிராம சேவகர் திரு. க. இரத்தினசிங்கம், திரு. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் பேசினர்.

பேச்சுக்களைத் தொடர்ந்து கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ஓடும்பஸ்ஸிலிருந்து குதித்தார்

### மண்டையில் காயம்

உடுப்பிட்டி, வியா.

ஓடிக்கொண்டிருந்தபஸ்ஸிலிருந்து குதித்ததால் பிரயாணி ஒருவர்காயமடைந்த சம்பவம் நேற்று கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

நேற்றுமாலை 5 மணியளவில் பருத்தித்துறையி லிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த கடுகதி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இந்த பிரயாணி கல்வியங்காட்டில் மணிஅடிக்காது திடீரெனக் குதித்ததாலேயே இவ்வித விபத்து ஏற்பட்டதாக அறியப்படுகிறது. பஸ் கண்டக்டர் டிக்கட்டுகளுக்கான கட்டணத்தை அறவிடாமல் வருகின்ற பொழுது கையிலேயே இவர் குதித்தாராம்.

# வரி விளம்பரம்

### EDUCATIONAL

Only few vacancies exist in our G. C. E. Ordinary level Arts/science/commerce classes Enrol without delay. United Institutes Nelliady, Karaveddi/107 Point Pedro Road, Nallur, Jaffna. 978

Applications accepted for admission to G. C. E. advanced level arts / science. United Institutes, Nelliady, Karveddi / 107 Point Pedro Road, Nallur, Jaffna 979

Trained Teachers can appear privately for GAQ. Classes now being conducted. Join without delay. United Institutes, Nelliady, Karaveddi/107 Point Pedro Road, Nallur Jaffna. 980

### தேவை

பிரதிநிதிகள் (Representatives) தேவை. ஆயிரம் ரூபாடிப்போசிட் (ரொக்கம்) கட்டக்கூடிய நற்சான்றுப் பத்திரமுள்ளவர்களுக்கு மாதச்சம்பளம் ரூபா100/-ம் கொமிஷனும் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1030 ஈழநாடு மேற்பார்த்து.1030

பலசரக்குக் கடைக்கு நல்ல அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். 'மங்களகபே', பிரதானவீதி, அச்சுவேலி 1034

பண்டத்தரிப்பு கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கங்களின் சமாசக் கைத்தறி நிலையத்திற்கு நெசவு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம்: மாதம் ரூ. 150/- (எல்லாமுட்பட) இத்துடன் தறிகளில் வேலை செய்வதற்குப் பயிற்சியும் அனுபவமுமுள்ளபெண்களிடமிருந்தும்விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், பண்டத்தரிப்பு ப. நோ, கூ. ச. சமாஜம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக்குப் பதியப்பட்ட கடிதத்தில் 30-9-65 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். 1039

காரியதரிசி ஒருவர் தேவை. விண்ணப்ப முடிவு தேதி 25-9-65. தகைமைகள்: ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் கடிதத் தொடர்பு கொள்ளக்கூடிய அறிவு, கடைக்கணக்கு வைத்தல், வியாபாரம், தொழில் மேற்பார்வை முதலியவற்றில் போதிய அனுபவம், 30திற்குக் குறையாதவயது. சம்பளம்: தகைமைக்கேற்ப ரூபா 100/- தொடக்கம் ரூபா 150/- வரை. தலைவர், அரியாலை ப. நோ. கூ. சங்கம் யாழ்ப்பாணம். 1036

கைத்தறிகளில் வேலைசெய்வதற்கு பயிற்சியுள்ள பெண்கள் தேவை. யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு, 25-ம் இலக்கத்தில், 20-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கும், மாலை 5-00மணிக்கும் இடையில் நேரில் வருபவர்களுக்கு பேட்டி நடாத்தப்படும், 1038

### விற்பனைக்கு

ஒஸ்டின் கேம்பிறிஜ் டிலிவறிவான் 33ஸ்ரீ 1780 உன்னத நிலையில் கே. ஆர். லிங்கம் மில்ஸ், 28, நீராவியடி, யாழ்ப்பாணம், 1037

### விற்பனைக்கு

ஏச் போர் (H 4) விதை நெல் 150 புசல் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்; இளைப்பாறிய பெரிய தம்பி ஆசிரியர் வீடு, காரைக்கால் ரோட்டு, இணுவில். 1032

மாநகரசபை 7-ம் வட்டாரம் நல்லூர் மூத்தவிநாயகர் கோவில் லேனில் கச்சேரி நல்லூர் ரோட்டிலிருந்து200 யாருக்குள் 2 1/2 பரப்பு பனைகள் நிரம்பிய வீடுகட்டுவதற்குகந்த காணி விற்பனைக்கு இருக்கின்றது. உடன் தொடர்பு கொள்ளவும். S. கனகரத்தினம், புறக்டர், சிவாஸ்ரன், நல்லூர். 992

பெர்குசன் ராக்ரர் மண்ணெண்ணை 1965-ம் ஆண்டுக்கு லைசென்ஸ், இன்சூரன்ஸ் உண்டு. உடன்பாவிப்புக்கு உகந்தது, 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் விசாரிக்கவும். தொலைபேசி: யாழ்ப்பாணம் 7113, 1015

அளவெட்டியில் 4 1/2 லாச்சம் காணி விற்பனைக்குண்டு. இது அளவெட்டி மத்தியில் ஆங்கில பாடசாலை, வைத்தியசாலை, மருத்துவ விடுதி, தபாற்கந்தோர் என்பவற்றிற்குக் கிட்ட, கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு வடக்கே செல்லும் வீதியும் டச்ரோட்டும் சந்திக்கும் இடத்தில் உண்டு. விரும்புவோர் திருமதி குலசிங்கம், டச்ரோட், அளவெட்டியில் விசாரணை செய்யவும். 1035

1 சிறி 9000வரிசையிலுள்ள NSU 50C.C. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றேடியோ என்ஜினியர்ஸ், 76, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம். 1041

### நன்றி கூறல்

3-9-65-ல் மரணமான எமது சகோதரன் மு. பாலசிங்கத்தின் ஈமக்கிரியையின் போது நேரில் சமுகந்தந்தவர்களுக்கும், தந்தி, தபால் மூலம் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்ட அனைவர்க்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நன்றியுள்ள, மு. சிவானந்தபிள்ளையும், சகோதரர்களும், வேலணை-4. 1040

## திருச்செல்வம் நாளைவருவார்

வல்வெட்டித்துறை, வியா,

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின்விஸ்தரிப்பு சம்பந்தமாக நேரில் பார்வையிடுவதற்காக நாளை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் இங்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார்.

## களத்துமேடு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இது எப்படி இருந்தாலும் கமக்காரர் விவசாயப்பகுதி போதனாசிரியர்களை அழைத்து வந்து தங்கள் வயல்களுக்கு எந்தவிதமானநெல் பொருத்தமான தென்பதை அவர்களிடமறிந்து அவர்களின் யோசனைக் கிணங்க நடந்து கொள்வது உசிதமானது. இந்த விஷயத்தில் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் கமக்காரரையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

— கலப்பை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகை பிடிக்கும் பழக்கம் மாணவரிடையே அதிகரிக்கிறது

கொழும்பு, புதன்

புகைபிடிக்கும் பழக்கம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெருகிவருவதாக கல்வி இலாகா நடத்திய புள்ளிவிபரம் ஒன்றிலிருந்து தெளிவாகியுள்ளது.

ஜி. ஸி. ஈ. வகுப்பில் பயிலும் மாணவர்களில் எண்பது சத விகிதத்தினர் புகைபிடிக்கும் பழக்கமுடையவர்களென்பது புள்ளிவிபரக் கணக்கெடுப்பு மூலம் தெரிய வந்துள்ளது. கீழ் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கூட புகைபிடிக்கிறார்கள்! கீழ்வகுப்பு மாணவர்களில் பத்து சதவிகிதத்தினர் புகைபிடிக்கின்றனர் என புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. பாடசாலை நேரங்களிலும் மாணவர்கள் புகைபிடிக்கிறார்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புகைபிடிப்பதின் ஆபத்தை மாணவர்களுக்கு வலியுறுத்தும் வகையில் பிரச்சார இயக்கத்தை கல்வி இலாகாவும் சுகாதார இலாகாவும் கூட்டாக நடத்தத் திட்டமிட்டுள்ளன. பாடசாலை நேரங்களில் புகைபிடிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# ஞாயிறை வேலைநாளாக்கியதற்கு யாழ். மாநகரசபை கவலை

## நல்லூரைப் புனித நகராக்க முயற்சி

யாழ்ப்பாணம், வியா.

"தமது கட்சி தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கத்தை மனதில் வைத்தே திருமதி பண்டாரநாயக்கா போயா தினங்களை விடுமுறையாக்கவேண்டுமென்ற பிரசாரத்தை ஆரம்பித்து வைத்தார் இதனைத்தொடர்ந்து தேசிய அரசாங்கம் ஸ்ரீமாவின் பிரசாரத்தை அமுலாக்கியிருக்கிறது. புத்தபிரான் தர்மத்தை போதிக்கும்படி சொன்னாரே தவிர அதனைக் கட்டாயப்படுத்தும்படி வற்புறுத்தவில்லை. ஆனால் புத்தபிரானின் கொள்கைக்கு எதிராக மற்ற மதத்தினர்கள் மத்தியில் இப் போயா தினங்களை அரசாங்கம் திணிப்பது மிகவும் கவலைக்குரியதொன்றாகும்"

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று மாலை மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா தலைமையில் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தாம் கொண்டுவந்த பிரேரணையின் மீதான விவாதத்தின் போது பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. ராஜசூரியர் மேலும் பேசுகையில், கத்தோலிக்கர்கள் பௌத்தர்களுடைய எதிரிகளல்லவென்றும் இதனை அரசாங்கம் மனதில்கொண்டு ஆவனசெய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

"ஞாயிற்றுக்கிழமையை வேலைநாளாக்குவதென்ற அரசாங்கத்தின் முடிவை இச் சபை வெகு கவலையுடன் நோக்குகின்றது" என்ற பிரேரணை திரு. ஏ. ஜி. ராஜசூரியரால் கொண்டு வரப்பட்டு பிரான்சிஸ் சேவியரால் அனுமதிக்கப்பட்டு சபையில் நிறைவேறியது.

### 'வெள்ளியை விடுதலைதினமாக்குக'

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் புனிததினமான வெள்ளிக்கிழமையை ஓர் விடுதலைதினமாக்கவேண்டும் என்ற பிரேரணை திரு. தம்பு கந்தையாவால் பிரேரிக்கப்பட்டு திரு. எஸ். நாகராஜாவினால் அனுவதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### நல்லூரை புனிதநகராக்குக

நல்லூர் கந்தசாமி கோயிலின் சூழலை புனித நகரமாக்கவேண்டுமென்று பிரதமமந்திரியையும், அது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களையும் நல்லூர் எம். பி. யுடன் மாநகர சபை அங்கத்தவர்கள் மூவர் அடங்கிய தூதுகோஷ்டி ஒன்று சென்று பேட்டிகாண வேண்டுமென திரு. ஆ. துரைராஜசிங்கம் கொண்டு வந்த தீர்மானம் சபையில் நிறைவேறியது.

அத்தூதுக்குழுவில் மேயர் திரு. மகாதேவா, திரு. ரி. எஸ். துரைராசா, திரு. ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் அங்கம்வகிப்பர்.

# யுதாண்ட், யுத்தநிறுத்த முயற்சி வெற்றி பெறவில்லை

## இந்திய தரப்பில் அறிவிப்பு

புதுடில்லி, செப். 15

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைத் தோற்றுவிக்க ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லையென இந்தியப் பிரதமர் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தெரிவித்திருந்த யுத்தநிறுத்தத்துக்கான நிபந்தனைகளைத் தொடர்ந்தே இவ்விதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியென்றும் காஷ்மீர் இதில் உரிமைகொண்டாட முடியாதென்றும் இந்திய வெளிநாட்டுமந்தி திரு. சுவர்ண்சிங் அறிவித்துள்ளார்.

சமாதானத்தை தோற்றுவிக்க அக்கறைகொண்டுள்ள நாடுகள் மீது தாம் பெருமதிப்புக்கொண்டிருப்பதாகவும் திரு. சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யுதாண்ட் நம்பிக்கை

புதுடில்லி, செப். 15

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலும் சமாதானம் தோன்றக்கூடியதற்கான சாத்தியக்கூறுகள் மேம்பட்டிருக்கிறது என்றும் இந்த நிலை குறித்துதாம் உற்சாகம் கொண்டிருப்பதாகவும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இன்று இந்தியாவை விட்டு நியுயோர்க் பயணமாகுமுன்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினார். தாம் பயனுள்ள பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் நிலைமை பற்றி ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

# சீன இயந்திரத்தை சிறிமா வாங்கினர்

## நன்கொடையல்ல!

கொழும்பு, புதன்

1962-ம் ஆண்டில் அப்போதைய பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்கா சீனாவிடமிருந்து 'ரோட்டரி' அச்சு இயந்திரம் ஒன்றை வாங்கினாரே தவிர அதை சீன அரசாங்கம் ஒரு உபகாரப்பொருளாக அன்பளிக்கவில்லை என, இன்று பார்லிமெண்டில் திரு. சி. என். மத்தேயு கேட்ட கேள்வியொன்றுக்கு நிதி மந்திரி சார்பாக பதிலளிக்கையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்ன குறிப்பிட்டார்.

திருமதி பண்டாரநாயகா பதிவுசெய்யப்பட்ட இலங்கை வர்த்தகரல்லஎன்றும் இந்த இயந்திரத்தின் பெறுமதி ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா எனவும், இறக்குமதி தீர்வையாக 49781 ரூபா 5 சதம் செலுத்தப்பட்டதெனவும் அவர் தெரிவித்தார். இந்த இயந்திரம் உபகாரப் பொருள் என்பதற்கு அத்தாட்சி எதுவுமில்லைஎனவும் இயந்திரத்தின் பெறுமதியான 150,000 ரூபா சீனாவுக்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும் மந்திரி தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் இயந்திரத்தை வாங்குவதற்கு பெற்ற இறக்குமதி லைசென்ஸின் "போட்டோஸ்டாட்" பிரதியைக் காட்டி இயந்திரம் சீனாவின் அன்பளிப்பல்ல என்றும் திரு. பீலிக்ஸ் டயஸ் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலம்

கொழும்பு, புதன்

உள்ளூராட்சிச்சபைகளின் தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறுமா எனத் திரு. எல். ஸி. டி' சில்வா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் எந்த ஒரு ஸ்தலஸ்தாபன சபையினது ஆட்சிக் காலத்தையேனும் நீடிக்க அமைச்சர் இன்னும் முடிவுசெய்யவில்லை என உதவி ஸ்தலஸ்தாபன மந்திரி தெரிவித்தார்.

பொதுமக்கள் நன்மை கருதி எந்தச்சபையினதேனும் ஆட்சிக்காலம் நீடிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதைச்செய்ய மந்திரி தயங்கமாட்டார் [illegible] உதவி மந்திரி தெரிவித்தார்.

# செனட்டராக்க கோரிக்கை

கோண்டாவில், புதன்

மல்லாகத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான திரு. எஸ். நடராசாவை செனட் சபையில் ஒரு அங்கத்தவராக நியமிக்குமாறு கோரும் பிரேரணை உடுவில் கிராம சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

# அணைக்கட்டுகள் மீது குண்டுவீச்சு

பெர்லின், செப். 15

வடவியட்நாமில் நீர்ப்பாசன அணைக்கட்டுகளின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வெளிவிவகார அமைச்சின் ஓர் உயர்தர அதிகாரி வன்மையாகக் கண்டித்தார்.

## இன்று வன்னியசிங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுபட்டு ஒரு இலட்சிய வீரனாகத் திகழ்ந்தார். பல தடவைகள் தடுப்புக்காவலில் இருந்தார். இன்று முதல் பல இடங்களில் அவரின் ஞாபகார்த்த விழா கொண்டாடப்படுகிறது.

17-ம் திகதி ஆவரங்கால் சிவன்கோவிலடி.

18-ம் திகதி நெல்லியடி; முருகமூர்த்தி கோவிலடி; மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடி; இணுவில்.

19-ம் திகதி கொக்குவில் மாத்தனை முருகமூர்த்தி கோவிலடி; கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலடி.

## "பாக். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர் இதில் மாண்டதாயும் அறிவிக்கப்பட்டது.

பூஞ்ச் பகுதியில் ஒரு பாகிஸ்தானிய நிலை பிடிபட்டது. பெரிய ஆயுத, வெடிமருந்துக் கிடங்கு அங்கு கைப்பற்றப்பட்டது.

இதற்கிடையில் இந்திய விமானப்படை விமானங்கள் பெஷாவர், சர்கோடா விமான நிலையங்களை மீண்டும் தாக்கி பெருஞ் சேதம் விளைவித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## 5 வருடக் கடுழியச் சிறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீதா (வயது 11) விடம் தகாத முறையில் நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சிறுமியின் தகப்பனார் நாகூர்தம்பி, தாயார் பொன்னியம்மா, மாமனார் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

ஜூரி சபையினர் சுமார் 30 நிமிட மந்திராலோசனையின் பின் எதிரி குற்றவாளியெனத் தெரிவித்தனர். ஜூரி சபையினர் எதிரி குற்றவாளியென்று 6—1 ஆக தீர்ப்பளித்தனர், ஜூரி சபையினரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாகக் கூறிய நீதியரசர், எதிரிக்கு 5 வருட கடுழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்கு முன் எதிரியிடம், உமக்காக ஆஜரான அப்புக்காத்து நன்றாக வாதாடியிருக்கிறார் என நீதியரசர் தெரிவித்தார்.

எதிரி இதற்கு முன் குற்றப்படவில்லையென்றும், எதிரிக்கு மனைவியும் நான்கு குழந்தைகளும் இருப்பதாகவும் எதிரியின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. சி. சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

சோவியத்தூதுவர்

# நாளை யாழ்ப்பாணம் வருவார்

குரும்பசிட்டி, வெள்ளி

இலங்கையிலுள்ள சோவியத் தூதுவர் திரு. எல். ஏ. கொரிபின் தம்பதிகள் நாளை காலை கார்மூலம் யாழ்ப்பாணம் வருகிறார்கள். இவர்களுடன் சோவியத் கலாச்சார அதிகாரி திரு. சு. வி. கோவுவும் இங்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அன்றைய தினம் காலை அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, யாழ்ப்பாண மேயர் ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதோடு செல்வி திரிபுரசுந்தரி குமாரசாமியினால் நடாத்தப்படும் நாட்டிய கலாசாலைக்கும் ஸ்தானிகர் கோஷ்டியினர் விஜயம் செய்வர். உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நண்பகல் போசன விருந்து அளித்துக் கௌரவிப்பார்.

சுன்னாகம் முக்கலைப்பயிற்சி நிலையத்தில் மாலை நடைபெறவிருக்கும் இலங்கை-சோவியத் நட்புறவு சங்க யாழ்ப்பாணக் கிளை வருடாந்த மகாநாட்டில் விசேஷ பிரதிநிதிகளாக கலந்து கொள்வர். இதனையடுத்து நாவலர் மன்ற ஆதரவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாரதி விழாவில் ஸ்தானிகர் பிரதம விருந்தினராக பங்குபற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார். இவ்விழாவில் உடுவில் எம். பீ., சுன்னாகம் பட்டின சபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம். திரு. வ. பொன்னம்பலம் ஆகியோரும் பேசுவர்.

# கி. மு. சங்கத்தின் 5-வது மகாநாடு

பம்பலப்பிட்டி, வியாழன்

அகில இலங்கை முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளனத்தின் 5-வது தேசிய மகாநாடு அக்டோபர் மாதம் 30-ம் திகதி கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு வடமராட்சிப் பகுதி முற்போக்கு வாலிபர் சங்கக்கிளைகள் இப்பொழுதிலிருந்தே ஆயத்தமாகி வருகின்றனர்.

கொழும்பு, புதன்

தேசியக் கல்வி மசோதாவை அடுத்த மாதம் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை பார்லிமெண்டில் சமர்ப்பிப்பார் என அறியப்படுகிறது.


# தேவை

21-9-65-க்கு முன்பாகத் தட்டெழுத்து இலிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) தராதரங்கள்:

(அ) எஸ். எஸ். ஸி. ஆங்கிலம் அல்லது தமிழ்.

(ஆ) தமிழ்ச் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் ஆங்கிலத் தட்டெழுத்திலும் நல்ல தேர்ச்சியிருத்தல் வேண்டும்.

(2) வேதனம்:

(அ) ரூ. 60—125 / 5X13

(ஆ) வாழ்க்கைப்படிச் செலவும் விசேஷ படிச் செலவும் அரசாங்க விகிதப்படி.

முதலியார் வை. மகேசன்,
தலைவர்,
வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூ. சமாசம்.
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

858


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org